**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை : திரு. எஸ். விஜயகுமார் எம்.ஏ., எம்,எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் திங்கள்கிழமை**
**அசல் வழக்கு எண்.34/2022**
**(CNR.NO.TNVP02-000066-2022)**

கோவிந்தன் .... வாதி

/எதிர்/

தவமணி .... பிரதிவாதி

இவ்வழக்கு 06.01.2022 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 03.02.2022 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 02.01.2023 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பொன்.அ.சிவா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்பு**

தாவா A, B மற்றும் C பிராமிசரி நோட்டுகள் அடிப்படையில் வாதிக்கு சேரவேண்டிய தொகையான ரூ.6,00,000/- மற்றும் தாவா தேதி வரையில் வட்டியில் கூடியது ரூ.1,02,866/- ஆக மொத்தம் தொகை ரூ.7,02,866/- இந்த

தாவா செலவுகள் ரூ.6,00,000/-க்கு வழக்கு முடிவடையும் வரையில் 9% வீதமும் பிறகு 6% வீதமும் பின்வட்டி முதலான அனைத்தும் வாதிக்கு பிரதிவாதியால் தாவா செலவுத் தொகைகளும் கிடைக்க தீர்ப்பு செய்ய வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2. வழக்குரை சுருக்கம்:-**

வாதியும் பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் இருவருக்கும் இடையில் நல்ல பழக்க வழக்கம் உண்டு என்றும் அவர்களுக்குள் பணம் கொடுத்து வாங்கும் அளவிற்கு பழக்கம் உண்டு என்றும் வாதி தற்காலம் விழுப்புரம் மாவட்டம், தளவனூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றும் பிரதிவாதி வாதியிடம் கடந்த 12.11.2019 தேதியன்று தனது குடும்ப செலவிற்காகவும் மற்றும் தனது அரிசிக்கடை வியாபாரத்திற்காகவும் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டார் என்றும், பிறகு அதே தேதியில் வாதி பெயருக்கு மேற்படி கடன் தொகையை வாதி வேண்டும்போது வாதியிடமோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற நபரிடமோ அசல் தொகையுடன் வட்டி மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூற்றுக்கு ரூ.1.00 வீதம் வட்டியும் சேர்த்து செலுத்தி பைசல் செய்துவிடுவதாக வாசகம் கண்டு ஒரு முறையான பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார் என்றும் இது தாவா A பிராமிசரி நோட்டு ஆகும் என்றும் பிறகு மேற்படி கடன் நிலுவையில் இருக்கும் போது மேலும் 09.01.2020 தேதியில் மேற்படி பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காகவும் மற்றும் வீடுகட்டும் செலவிற்காகவும் வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டார் என்றும் அந்த தொகைக்கு தனியே அசல் ரூ.100/-க்கு மாதம் வட்டியாக ரூ.1.00 வீதம் சேர்த்து அசலும் வட்டியுமாக வாதி வேண்டும் போது அவரிடமாவது அவரது அதிகாரம் பெற்ற நபரிடமாவது செலுத்தி பைசல் செய்து விடுவதாக ஷரத்துக்கள் கண்டு வாதியின் பெயருக்கு இரண்டாவது பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார் என்றும் இது தாவா B பிராமிசரி நோட்டு ஆகும் என்றும் ஏற்கனவே

பிரதிவாதி வாதியிடம் வாங்கிய கடன் நிலுவையில் இருக்கும் போது கடந்த 20.06.2020 தேதியன்று தனது குடும்ப செலவிற்காகவும் மற்றும் வீடுகட்ட கம்பி, ஜல்லி மற்றும் மணல் போன்ற இதர பொருட்கள் வாங்குவதற்காகவும் வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டார் என்றும் அந்த தொகைக்கு தனியே அசல் ரூ.100/-க்கு மாதம் வட்டியாக ரூ.1.00 வீதம் சேர்த்து அசலும் வட்டியுமாக வாதி வேண்டும் போது அவரிடமாவது அவரது அதிகாரம் பெற்ற நபரிடமாவது செலுத்திபைசல் செய்து விடுவதாக ஊரத்துக்கள் கண்டு வாதியின் பெயருக்கு மூன்றாவதாக பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார் என்றும் இது தாவா C பிராமிசரி நோட்டு ஆகும் என்றும் ஆக மொத்தம் மூன்று தவணைகளில் மேற்படி பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்றுள்ளார் என்றும் ஆனால் இதுவரை இக்கடன் தொகைகளுக்கும் அசல் வட்டி என்று யாதொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்றும் ஆனால் வாதி பல முறையில் நேரிலும் ஆள் மூலமும் கேட்டபோதும் மேற்படி கடன் தொகையில் அசலோ, வட்டியோ இதுநாள் வரையில் செலுத்தப்படவில்லை என்றும் பிரதிவாதி விவசாயி கடன் நிவாரண சட்டத்தின்படி சலுவை பெற தகதியுடையவர் அல்ல என்ற போதிலும் தாவா கடனுக்கு வட்டி 9% வீதம் தான் வட்டி கோரப்பட்டுள்ளது என்றும் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் அவரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 07.11.2022 அன்று அவர் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துள்ளார். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.2 ஆக திரு.சம்பத் என்பவரும், வா.சா.3 ஆக

திரு.கோபால் என்பவரும், வா.சா.4 ஆக திரு.கோவிந்தராசு என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சனை

இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா அல்லது இல்லையா?_என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

## 6. தீர்வு

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதி ரூ.6,00,000/-ஐ பல தேதிகளில் பெற்றுக்கொண்டு வாதிக்கு தாவா 3 பிராமிசரி நோட்டுகளை எழுதிக்கொடுத்தார் என்றும், தாவா 3 பிராமிசரி நோட்டுகளை பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிறகு தாவா பிராம்சரி நோட்டுகள்படி சேர வேண்டிய அசல் வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியிடம் பல முறை நேரில் கேட்டதில், அதற்குப் பிரதிவாதி, தாவா பிராமிசரி நோட்டுகள் படி சேர வேண்டிய அசல்வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் கால விரயம் செய்து வந்தார் என்றும் பின்னர் அந்த கடனை நோட்டிஸ் மூலம் கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பி தரவில்லை என்றும் வாதி தன் வழக்கை வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளார் என்றும் கூறி வழக்கை தீர்ப்பு செய்யுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணமும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/வாதி தனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்கு மூலத்தில் பிராது சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2, தாவா வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டின் 1ம் சாட்சி வா.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்திசைந்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3, தாவா வா.சா.ஆ.3 பிராமிசரி நோட்டின் 2ம் சாட்சி வா.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்திசைந்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.4, தாவா வா.சா.ஆ.2 பிராமிசரி நோட்டின் 1ம் சாட்சி வா.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்திசைந்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 தாவா " A " பிராமிசரி நோட்டை கருத்தில் கொண்டதில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.2,00,000/-ஐ கடனாக பெற்று தாவா " A " பிராமிசரி நோட்டை 12.11.2019 அன்று வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்திருப்பதும் அதற்காக பிரதிவாதி எவ்வித தொகையும் வரவு வைக்காமல் இருப்பதும் புலனாகிறது.

10. வா.சா.ஆ.2 தாவா " B " பிராமிசரி நோட்டை கருத்தில் கொண்டதில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.2,00,000/-ஐ கடனாக பெற்று தாவா " B " பிராமிசரி நோட்டை 09.01.2020 அன்று வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்திருப்பதும் அதற்காக பிரதிவாதி எவ்வித தொகையும் வரவு வைக்காமல் இருப்பதும் புலனாகிறது.

11. வா.சா.ஆ.3 தாவா " C " பிராமிசரி நோட்டை கருத்தில் கொண்டதில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ2,00,000/-ஐ கடனாக பெற்று தாவா " C "பிராமிசரி நோட்டை 20.06.2020 அன்று வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்திருப்பதும் அதற்காக பிரதிவாதி எவ்வித தொகையும் வரவு வைக்காமல் இருப்பதும் புலனாகிறது.

12. பிரதிவாதி பிராது சங்கதிகளை மறுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவர் வா.சா.1 முதல் வா.சா.4 மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சாட்சிய சான்றாவணங்களை குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. அவர் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 புரோநோட் கடன் நிலுவையை செலுத்தவும் இல்லை. எனவே வாதி பிரதிவாதிக்கு எதிராக தனது வழக்கை தன் தரப்பு சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளது புலனாகிறது.

13. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இந்த வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.7,02,866/- மற்றும் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.7,02,866/- மற்றும் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் 2 மாதங்கள்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 30.01.2023 திங்கள்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

S VIJAYAKUMAR Digitally signed by S VIJAYAKUMAR Date: 2023.01.30 18:15:19 -0500

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா. 1 திரு.கோவிந்தன் (வாதி)

வா.சா.2 திரு.சம்பத்

வா.சா.3 திரு.கோபால்

வா.சா.4 திரு.கோவிந்தராசு

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.11.2019 | வாதி பெயருக்கு பிரதிவாதி ரூ.2,00,000/-க்கு பூர்த்தி செய்து எழுதி கொடுத்த தாவா ஏ பிராமிசரி நோட்டு (அசல்) |
| வா.சா.ஆ.2 | 09.01.2020 | வாதி பெயருக்கு பிரதிவாதி ரூ.2,00,000/-க்கு பூர்த்தி செய்து எழுதி கொடுத்த தாவா பி பிராமிசரி நோட்டு (அசல்) |
| வா.சா.ஆ.3 | 20.06.2020 | வாதி பெயருக்கு பிரதிவாதி ரூ.2,00,000/-க்கு பூர்த்தி செய்து எழுதி கொடுத்த தாவா சி பிராமிசரி நோட்டு (அசல்) |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

(இல்லை)

S VIJAYAKUMAR Digitally signed by S VIJAYAKUMAR Date: 2023.01.30 18:15:28 -0500

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.